பண்டாரவளை மாநகரசபை
பதுளை மாவட்டம்
-----------------------------------------

1. நிதி கூற்று

1.1 நிதி கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஆம் வருடத்தின் மே மாதம் 22 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அதிபதியின் அறிக்கை 2019 மே மாதம் 30 திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே மாதம் 31 திகதியும் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 நிலை கணக்கிடப்பட்ட அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் நிலைக்கணக்கிடப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவுகள் தவிர நிதிக்கூற்றுக்களினால் 2018 டிசம்பர் 31 திகதிக்கு பண்டாரவளை மாநகரசபையின் நிதி நிலை மற்றும் அத்தினத்துடன் முடிவடையும் வருடத்திற்கான அதன் நிதி செயற்பாடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கிட்டு நியதிகளுக்கவமவான உண்மையானதும் நியாயமானதுமான நிலையை பிரதிபலிக்கின்றதென்பது எனது அபிப்ராயமாகும்.

1.3 நிலை கணக்கிடப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கியல் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (i) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தில் முத்திரைக்கட்டணம் மூலமான வருமானம் ரூ.2,229,117 குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது. | கணக்கு சரிசெய்யப்பட வேண்டும். | 2019 வருடத்தில் இந்த கணக்கீட்டு குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து சரிப்படுத்துவேன். |
| (ii) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் நீதிமன்ற தண்டப்பணம் மூலமாக வருமானம் ரூ.354,579 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கு சரிசெய்யப்பட வேண்டும். | 2019 வருடத்தில் இந்த கணக்கீட்டு குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து சரிப்படுத்துவேன். |
| (iii) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திர கட்டணம் மூலமாக வருமானம் ரூ.55,800 கூடுதலாக கணக்கிடப்பட்டுள்ளது. | கணக்கு சரிசெய்யப்பட வேண்டும். | 2019 வருடத்தில் இந்த கணக்கீட்டு குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து சரிப்படுத்துவேன். |
| (iv) | செலுத்த வேண்டிய ஊழியர் பினை வைப்பு கணகக்கிற்கு பதிவிடப்பட்ட ரூ.23,516 தொகை முதலீட்டு வட்டி கணக்குக்கு கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கு சரிசெய்யப்பட வேண்டும். | 2019 வருடத்தில் இந்த கணக்கீட்டு குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து சரிப்படுத்துவேன். |
| (v) | 04 கணக்கு விடயங்களுக்கான மிகுதி அது தொடர்பான விபரமடங்கிய உப அட்டவணைகளின் மிகுதியுடன் ஒப்பிடும் போது ரூ.3,217,851 தொகை மாறுபாடு காணப்பட்டது. | நிதிக்கூற்று மிகுதிகள் விபரமான உபஅட்டவனைகளில் மிகுதிக்கு சமமானதாக இருக்க வேண்டும். | இந்த குறைபாடுகள் தொடர்பாக பரிசோதித்து வருங்காலத்தில் அவற்றை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். . |

(ஆ) கணக்கா்ய்விற்கு தேவையான எழுத்துமூல ஆதாரங்கள் இன்மை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ரூ..3,051,552 தொகை பெறுமதியான ஆதன விடயமொன்றும் ரூ.12,975,969 தொகையான பொறுப்பு விடயங்கள் விபரமடங்கிய உபஅட்டவணை ஆகியன சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக திருப்திகரமாக வெளிப்பாடு காணப்படவில்லை. | கணக்கு மிகுதி உறுதிசெய்யப்பட்டு ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் வருடத்தின் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது, அனைத்து ஆதாரங்களும் கணக்கா்யவுக்கு சமர்ப்பிப்பேன்.˙. |

1.4 <u>அமைவாக இல்லாமை</u>

சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இல்லாமை.

| சட்ட திட்டங்கள் ஒழுங்குவிதிகளுக்கான சமர்ப்பிப்பு. | அமைவாக இல்லாமை. | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| ( அ) மாநகரசபை கட்டளைச்சட்டம் (ை) 218 பிரிவு | ஒவ்வொரு வருட நிறைவின் போது மாநகரசபையின் நிர்வாகம் தொடர்பாக விரிவான விபரங்களடங்கிய அறிக்கையொன்று சபைக்கும் அமைச்சருக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய செயலாற்ற நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும். | வருங்காலத்தில் நீதியாண்டிலிருந்து கட்டளைச்சட்டத்தின் 218 ஆம் பிரிவிற்கமைய தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். |
| (ை) 227 பிரிவு | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தில் குத்தகைக்கு கொடுக்கப்பட்ட 289 கடையறைகள் தொடர்பாக எழுத்துமூல ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமையநடவடிக்கையெடுக்கப்பட வேண்டும். | குறித்த தரப்புடன் எழுத்துமூல ஒப்பந்தம் தயார் செய்ய நடவடிக்கையெடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) லங்கை சனநாயக சோசலிச குடியரசின் கொள்வனவு விடயங்கள் விதிக்கோவையின் முதலாம் அத்தியாயத்தின் 1.2.1 பந்தி.<br><br>நிதி மீளாய்வு 2.1 பெறுபேறு. | மீளாய்வுசெய் யப்பட்ட வருடத்தில 04 பொதுமலசலக் கூடங்கள் கேள்வி நடைமுறைகளை பின்பற்றாமல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | கொள்வனவு நடைமுறை விதிக்கோவையின் பிரகாரம் செயலாற்ற வேண்டும். . | கொள்வனவு நடைமுறைக்கு அமைய கேள்வி நடைமுறைகளை செயற்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |
| ( இ) 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய இல. 30/2016 அரச நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குரித்தான 26 வாகனங்களது எரிபொருள் பாவனை தொடர்பாக பரிசோதனை இடம்பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட் வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் அவ்விதம் செய்வேன்.˙. |
| (ஈ) உள்ளூராட்சி ஆணையாளரது 1980 டிசம்பர் 31 திகதிய இல. 1980/46 கொண்ட சுற்றறிக்கை. | சபையினால் வெளியாருக்கு வழங்கப்பட்டுள்ள 563 கடைகளது பெறுமதி ஐந்து ஆண்டுகுளுக்கு ஒருதடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட் வேண்டும். | குறித்த வர்த்தக நிலையங்களது பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

அதற்கமைய மீளர்வுசெய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிவைடையும் வருடத்திற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.60,974,078 தொகையாவதுடன், அதனையொத்து கடந்த வருடத்தில் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.93,183,576 ஆக இருந்தது. .

2.2 <u>வருமான நிர்வாகம்</u>

2.2.1 <u>மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் திரட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம்.</u>

மீளாய்வு செய்யப்பட்ட வருடத்திற்கும் கடந்தாண்டுக்ககுமாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம் திரட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழ்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருவாய் மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியிலடப்பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியிலடப்ப ட்ட வருமானம | திரட்டிய வருமானம | டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மொத்த நிலுவை |
| | | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| (ை) | சோலைவரி மற்றும் வரி | 23,235,000 | 27,138,140 | 26,003,881 | 1,134,259 | 26,405,000 | 26,405,000 | 21,163,827 | 12,561,003 |
| (ைை) | வாடகை | 30,162,000 | 48,900,730 | 40,360,002 | 8,540,728 | 33,032,000 | 33,032,000 | 22,965,516 | 28,147,202 |
| (ைைை | அனுமதிப் பத்திரகட்டணம். | 8,314,000 | 9,812,705 | 9,812,705 | - | 7,810,000 | 7,810,000 | 7,957,957 | (147,957) |
| (ளை) | பிற வருமானம். | 28,991,000 | 51,701,653 | 40,783,444 | 10,918,209 | 19,019,000 | 19,019,000 | 25,551,453 | (4,199,645) |
| | மொத்தம். | 90,702,000 | 137,553,228 | 116,960,032 | 20,593,196 | 86,266,000 | 86,266,000 | 77,638,753 | 36,360,603 |

2.2.2 வருமானம் திரட்டும் செயலாக்கம்

| | கணக்கர்யவு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்கான பட்டியலிடப்பட்ட ரூ.137,553,228 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டிறுதியாகும் போது, ரூ.20,593,196 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லையென்பதுடன், அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு 15 வீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் 2019 ஆண்டில் முழுமையான அறவிட்டுக்கொள்வதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஓராண்டுக்கு மேலாக நிலுவையாக காணப்படும் நிலுவை சோலை வரி ரூ.10,726,995 தொகை மற்றும் நிலுவை மூலதன நன்கொடை ரூ.2,647,126 தொகை மற்றும் ஏனைய நிலுவை வருமாங்களான ரூ.109,015,417 தொகை ஆக மொத்தம் ரூ.122,389,538 ஆக அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மிகுதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கயைெடுக்கப்பட வேண்டும். | கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கையெடுப்பேன். |

2.2.3 சோலைவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டின் பட்டியலிடப்பட்ட ரூ.27,138,140 தொகையான சோலைவரி மற்றும் வரி வருமானத்தில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ.1,134,259 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.. | நிலுவை சோலைவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை சோலைவரி அறவிட நடவடிக்கை எடுப்பதாக, . |

2.2.4

நிலுவை வருமானம் அறவிடல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் பட்டியலிடப்பட்ட ரூ.48,900,730 தொகையான மொத்த வாடகை வருமானத்தில் ஆண்டு நிறைடையும் போது ரூ.8,540,728 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் 2019 வருடத்தில் முழுமையான அறவிட திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் பட்டியலிடப்பட்ட ரூ.51,701,653 தொகையான மொத்த பிற வருமானத்தில் ஆண்டு நிறைடைகையில், ரூ.10,918,209 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் 2019 வருடத்தில் முழுமையான அறவிட திட்டமிடப்பட்டுள்ளது. ஐஏ |

2.2.5 முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியதாகவிருந்த நிலுவை முத்திரைக்கட்டணம் ரூ.7,827,500 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முத்திரைக்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டில் நிலுவை முத்திரைக்கட்டண வருமானத்தில் ரூ.3,909,000 தொகை அறவிடப்பட்டதுடன், மிகுதி பணத்தையும் அறவிட மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாக்கம்

மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம் பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப்பாதைகள் தொடர்பான விடயங்களை முறைமையாக்கல் மற்றும் பரிபாலனம் செய்தல் மக்களது வசதியான பயன்பாடு வசதி மற்றும் நலன்புரி சேவை ஆகியன சபையினால் நிறைவேற்றப்படுவது தொடர்பாக தெரியவந்த விடயங்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்<br><br>சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவினை பெற்றிருப்பதுடன், சபையுடன் தொடர்புபடுத்தப்படும் வகையில், இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கை அளவிடுவதற்காக குறிக்காட்டிகள் இனங்காணப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பான அளவீட்டை செய்வதற்கான குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க ஆண்டுரீதியான இலக்குகளை அடையும் விருத்தி விகிதத்தை அளவிட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை தெளிவான இனங்கண்டும் அவற்றை அளவிடுவதற்காக குறிக்காட்டிகளை வருங்காலத்தில் இனங்கண்டு செலாற்றுவேன். |
| ( ஆ) | செயல் திட்டமிடல்<br><br>மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக சபை செயல்திட்டமிடல் வரைபடத்தை தயாரிக்க நடவடிக்கையெடுக்கவில்லை. | செயல்திட்டமிடல் வரைபடத்தை தயாரிக்க வேண்டும். | 2019 ஆண்டிற்காக செயல்திட்டமிடல் வரைபை தயாரிப்பேன். |

3.2 முகமைாத்துவம் சார் விணைத்திறன் அற்றதன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரித்தான கொப்பியாவத்த காணி 24 நபர்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டுள்ளதுடன், அறவிட வேண்டிய ரூ.4,881,060 நிலுவை குத்தகை பணம் அறவிட்டிருக்கவில்லை. | அனைத்து நிலுவை குத்தகை பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்காலத்தில் இத்தொகை அறவிடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | ஓராண்டு காலம் தொடக்கம் இருந்துவரும் கடன்கொடுத்தோர் ரூ.5,235,916 தொகையும் வேலைப்பிரிவு கடன்பட்டோர் தொகை ரூ.5,660,412 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய மிகுதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பெற்றதன் பின்னர் இக்கொடுப்பனவை சரிசெய்வேன். . |

3.3 <u>மனித வள முகாமைத்துவம்</u>

| கணக்கர்யவு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- | --- |
| (அ) | பணியாளர்தொகுதி அனுமதிக்கப்படாமை மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்கு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 4 பதவிகளுக்காக 10 பணியாளர் இருந்தனர். | மேலதிக பணியாளர்தொகுதி அனுமதிக்கப்பட வேண்டும். | மேலதிக பணியாளர்தொகுதி அனுமதிக்கப்பட செயலாற்றுவேன். |
| (ஆ) | பணியாளர்தொகுதி வெற்றிடம் மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்கு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபையின் 24 பதவிகளுக்காக 76 வெற்றிடங்கள். | பணியாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும்.. | வெற்றிடங்கள் முழுமையாக நிரப்புவதற்கு நடவடிக்கையெடுப்பேன். |

3.4 <u>கொள்வனவு .</u>
<u>கொள்வனவுத்திட்டம்</u>

| கணக்கர்யவு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- |
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக கொள்வனவு திட்டமிடலை தயார்செய்யப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு திட்டமிடல் தயாரிக்கப்பட வேண்டும். . | 2019 ஆண்டு கொள்வனவு திட்டமிடல் தயாரிப்பேன். |

4. <u>கணக்கீடு தொடர்பான செயலாற்றல் தன்மை மற்றும் நல்லாட்சி</u>

4.1 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்து கமிட்டி</u>

| கணக்கர்யவு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- |
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை இல.டி.எம்.ஏ 2009 (01) கொண்ட 2009 ஜுன் 09 கொண்ட சுற்றறிக்கைக்கு அமைய காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டத்தை நடாத்த வேண்டுமெனினும் மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி 02 மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி நடாத்தப்பட வேண்டும். | 2019 ஆண்டில் காலாண்டுக்கொன்று வீதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டிகள் நடாத்துவதற்கு நடவடிக்கையெடுப்பேன். |